## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2020

-----------------------------------------------------------------------

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயக்கச் செயற்பாடுகள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதுடன் சம்பந்தப்பட்ட முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரது பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனமும் அதன் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான விதத்தில் அதற்குரித்தான வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிற்காக உரிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணுதல் வேண்டுமெனக் கோருகின்றது. மேற்படி சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவின் படி, ஏனைய கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனத்தினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அவற்றின் நிதிக்கூற்றுக்களை உரிய விதிகளில் சொல்லப்பட்டவாறு அக்காலப்பகுதிக்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் இணைத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்தச் சட்டத்தின் 38 (1) (ஈ) பிரிவின் படி, வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் சரியான நேரத்தில் தயாரித்துச் சமர்ப்பிக்கப்படுவதனை உறுதி செய்தல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் வேண்டப்படுகின்றார்.

### 1.2 கணக்காய்வுக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கத் தவறுதல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் மற்றும் மீளாய்வாண்டுக்கான வரைபு ஆண்டறிக்கைகள் நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களிற்குள் வரிசை அமைச்சிற்கு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதியம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் | (i) | கூட்டுத்தாபனத்தினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றின் பங்களிப்புகளை கணிப்பீடு செய்யும் போது, | முகாமைத்துவத்தினால் அன்றாடச் செயற்பாடுகளை பாதிக்காதவாறு குறித்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் | கூட்டுத்தாபனம் குறித்த சட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இணங்கியொழுக வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டங்கள். | ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட வாழ்க்கைப் படிச் செலவுகள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறெனின், கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம், ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றின் நிலுவைப் பணங்கள் மற்றும் மிகைக் கட்டணமாக ரூபா 349.79 மில்லியன் மற்றும் ரூபா 174.89 மில்லியன் செலுத்த நேரிட்டது. எவ்வாறான போதிலும், பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டணங்களின் கூட்டுத்தொகையான ரூபா 524.68 மில்லியன் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆராயப்பட்டவாறு உள்ளது. | |
| | | (ii) கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேம நிதியத்திற்கு உரிய பங்களிப்பான ரூபா 169.02 மில்லியன் மற்றும் மிகைக் கட்டணமான ரூபா 71.87 மில்லியன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அனுப்பிவைக்கப்படாது காணப்பட்டது. மேலும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலுத்தப்படாத பங்களிப்பான ரூபா 607.62 மில்லியனானது 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் அன்றாடச் செயற்பாடுகளை பாதிக்காதவாறு குறித்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டவாறு உள்ளது. | ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் விதிகளுக்கமைய பங்களிப்புகள் மற்றும் மிகைக் கட்டணங்கள் உரிய திகதியில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய 121/1979 ஆம் இலக்க கட்டளைகளுடனான உள்ளக காசோலைகள் அலுவலக சுற்றறிக்கையின் 2(இ) பந்தி | கட்டளைகளுடன் இணைத்து காசோலைகளால் முற்பணங்கள் வழங்கப்பட்டவுடன், அத்தகைய முற்பணங்கள் 30 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட முற்பண பட்டியலின் பிரகாரம், ரூபா 271.28 மில்லியன் கூட்டுத்தொகையான | காசோலைகள் முன்கூட்டியே வரையப்பட்டிருந்த போதிலும், இவை விசேட முற்பண கொடுப்பனவுகள் அல்ல என்பதுடன், பொருட்களை வழங்கியவுடன் கொடுக்கல் வாங்கல் நிறைவடைவதுடன், உள்ளக ஆவணப்படுத்தலுக்கு | முற்பணங்கள் உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதுடன், அவற்றுக்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முற்பணங்கள் 30 நாட்களுக்கு மேலாக தீர்க்கப்படாது காணப்பட்டதுடன், அவற்றுள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முறையே ரூபா 14.27 மில்லியன் மற்றும் 225.91 மில்லியன் தொகைகள் ஒன்று முதல் ஐந்து வருடங்கள் மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது.<br><br>மேலும், கால அட்டவணைக்கமைய கட்டளை முற்பணங்களுடனான காசோலைகளின் கடன் மீதிகள் ரூபா 197.69 மில்லியனாக காணப்பட்டதுடன், கடன் மதிகளுக்கான காரணங்கள் கணக்காய்வுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. | காலம் எடுக்கும். பதிவேடுகளை சமர்ப்பிப்பதில் இடம்பெற்றுள்ள தாமதங்களை நடைமுறை முழுவதும் இனங்கண்டிருந்ததுடன் , ஒவ்வொரு விடயமாக அதனை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய 122/1979 ஆம் இலக்க கட்டளைகளுடனான உள்ளக காசோலைகள் அலுவலக சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்திற்காக விசேட காசு முற்பணங்கள் வழங்கப்படுகின்ற போது, அந்த முற்பணங்கள் 14 நாட்களினுள் தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், ரூபா 10.99 மில்லியனை விட அதிகமான 05 வருடங்களை கடந்த காசு முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது. | கட்டுப்பாட்டு நடைமுறையொன்றாக விசேட காசு முற்பணங்களை தீர்க்கும் நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கடுத்த வருடங்களில் குறிப்பிட்ட அளவில் குறைவதற்கு காரணமாக அமைந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் காசு முற்பணங்களை உரிய காலப்பகுதியில் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 செயலாற்றல்

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோள்கள் 2008 மார்ச் 28 ஆந் திகதிய 1543 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், அவை பின்வருமாறு: (i) கட்டிடம், சிவில் இன்ஜினியரிங் மற்றும் ஏனைய பொறியியல் செயற்திட்டங்களின் புலனாய்வு, திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணம் (ii) மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் (iii) ஆதன அபிவிருத்தி பணிகளை பொறுப்பெற்றல் (iv) தயார்நிலை கலவை கான்கிரீட், வலுவூட்டப்பட்ட கான்கிரீட் மற்றும் முன் அழுத்தப்பட்ட கான்கிரீட் தயாரிப்புகளை உற்பத்திசெய்து விற்பனை செய்தல் (v) பொறியியல் செயற்திட்டங்கள் / நிறுவனங்களுக்குத் தேவையான கட்டுமானப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல் (vi) பொறியியல் மற்றும் தொழில்நுட்ப

பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் (vii) மேற்கூறிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள், முறைகள் மற்றும் நுட்பங்கள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்தல்.

**2.2.1** கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மீளாய்வாண்டினுள் நிர்மாணப் பிரிவு, நிர்மாண கூறுகள் பிரிவு மற்றும் இயந்திர மற்றும் மின்சாரப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் தொடர்பிலா செயலாற்றலின் பொழிப்பு பின்வருமாறு.

| பிரிவு இல. | விபரம் | வருமானம் | | | செலவினம் | | தேறிய இலாபம் / (நட்டம்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2019 ரூபா மில். | 2020 ரூபா மில். | மாற்றம் % | 2019 ரூபா மில். | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். | 2020 ரூபா மில். | மாற்றம் % |
| 01 | பிரீகாஸ்ட் யார்ட் ஏக்கல | 240.15 | 105.02 | (56.27) | 245.49 | 196.72 | (5.34) | (91.89) | (1620.78) |
| 02 | பிரீகாஸ்ட் யார்ட் - ரத்மலான | 78.87 | 50.35 | (36.16) | 105.94 | 90.21 | (27.08) | (39.86) | (47.19) |
| 03 | தங்கொடுவ தச்சுத் தளம் மற்றும் மிக்ஸ் யார்ட் | 13.14 | 9.94 | (24.35) | 27.41 | 32.87 | (14.27) | (22.92) | (60.62) |
| 04 | தெமட்டகொட கொங்ரீட் வார்ப்புகள் தளம் | 221.39 | - | (100.00) | 226.09 | 16.78 | (16.78) | (4.70) | 71.99 |
| 05 | வெலிகந்த பிரீகாஸ்ட் யார்ட் | 2.43 | 0.02 | (99.18) | 7.78 | 4.7 | (5.35) | (4.70) | (12.15) |
| 06 | அலுமினியம் வேலைகள் - ரத்மலான | 34.60 | 19.88 | (42.54) | 64.88 | 39.18 | (30.28) | (19.31) | 36.23 |
| 07 | பேலியகொட பிரதான வேலைத்தளம் | 80.31 | 21.43 | (73.32) | 66.46 | 56.07 | 13.84 | (34.64) | (350.29) |
| 08 | பேலியகொட செயற்பாட்டு தளம் | 64.73 | 7.12 | (89.00) | 103.29 | 52.83 | (38.57) | (45.71) | (18.51) |
| 09 | இரத்மலான வேலைத்தளம் | 57.18 | 6.84 | (88.04) | 49.93 | 26.16 | 7.25 | (19.33) | (366.62) |
| 10 | போக்குவரத்து மற்றும் லொஜிஸ்டிக் பிரிவு | 61.65 | 12.90 | (79.08) | 55.43 | 39.91 | 6.22 | (27.01) | (534.24) |
| 11 | தீயணைப்பு சேவைகள் கட்டிடத் தளம் | 13.74 | 5.21 | (62.08) | 16.22 | 11.57 | (2.48) | (6.36) | (156.45) |
| | **மொத்தம்** | **868.19** | **238.71** | **(72.49)** | **968.92** | **567.0** | **(112.84)** | **(316.43)** | **(180.42)** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிரந்தர தளங்கள் மற்றும் வேலைத்தளங்களின் செயலாற்றல் தொடர்பில் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பில் | கொரோனா வைரஸ் தொற்றுநோய் நிலைமை மொத்த இலங்கை சமூகமும் | நட்டத்தை குறைப்பதற்கு மற்றும் வியாபாரத்தினை தொடர்ச்சியாக நடாத்துவதற்கு உரிய |

| | | | |
|---|---|---|---|
| | பகுப்பாய்வு மேற்கொண்ட பின்னர், மீளாய்வாண்டில் அனைத்து தளங்களும் ரூபா 316.43 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டம் விளைவித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தளங்களிடையே (12.15) சதவீதம் மற்றும் (1,620) சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் இலாபம்/நட்டம் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. | இந்த காலப்பகுதியில் முகங்கொடுத்துள்ளது. | மாற்று சந்தர்ப்பங்களை இனங்காண உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா 629.48 மில்லியனால் அல்லது 72.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறான போதிலும், மொத்த செலவினமானது 401.92 மில்லியனால் அல்லது 41.48 சதவீதத்தினால் மாத்திரம் வீழ்ச்சியடைந்திருந்தது. | தொழிற்சாலைகளை பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் பாதுகாப்பு ஆகியவை நிலையான கிரயமாக செலவிடப்படும். | செலவினங்களை உரிய முறையில் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 கூட்டுத்தாபனத்தின் காசுப் பாய்ச்சல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, நிர்மாணங்கள் பிரிவு, நிர்மாணக் கூறுகள் பிரிவு, இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு மற்றும் மதியுரைப் பிரிவு என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 122.94 மில்லியன், ரூபா 76.08 மில்லியன் , ரூபா 120.34 மில்லியன் மற்றும் ரூபா 54.40 மில்லியன் தொகையான எதிர்மறை காசுப் பாய்ச்சலைக் காண்பித்திருந்தன. | 2020 திசெம்பர் 31 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த பணப் பற்றாக்குறை ரூபா 119 மில்லியனாக பதிவாகியுள்ளது. | காசு முகாமைத்துவத் திற்கான முறையான தொழிற்படு மூலதன முகாமைத்துவம் நெருக்கமான மேற்பார்வையுடன் செயற்படுத்தப்பட வேண்டும் |

## 2.4 தேசிய உபகரண மற்றும் இயந்திரவியல் நிறுவனத்தின் செயற்பாடுகள் (NEMO) பிரிவு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திர அமைப்பு (NEMO) பிரிவினால் செயல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் போதுமான தகவல்கள் அடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை என்பன செயற்திட்டங்களுக்கான | செயற்திட்ட தகவல் சமர்ப்பிக்கப்பட்டது. | செயற்திட்டங்களின் துல்லியம், முழுமை, பொருத்தம் மற்றும் திட்டங்களின் செலவினங்களுக்கான அதிகாரம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கு போதுமான அளவுத் தகவல்கள் கணக்காய்விற்கு |

| | | |
|---|---|---|
| செலவினங்களுக்கான துல்லியம், முழுமை, பொருத்தம் மற்றும் அதிகாரம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 10.56 மில்லியன், ரூபா 969.89 மில்லியன், ரூபா 97.75 மில்லியன், ரூபா 65.26 மில்லியன் மற்றும் ரூபா 2.12 மில்லியன் தொகையான முறையே வருமான வரி, பெறுமதிசேர் வரி, பொருளாதார சேவைகள் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பொருட்கள் சேவைகள் வரி ஆகியவற்றை செலுத்தாமையால் 2014 முதல் 2020 வரை ரூபா 143.10 மில்லியன் ஆன மிகைஅறவீடு உள்நாட்டு இறைவரித் திணைளத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. | வரி செலுத்தத் தவறியதால் மிகைஅறவீடு விதிக்கப்பட்டாலும், அந்தந்த வரிகளின் தீர்ப்பனவின்போதுஇவை தள்ளுபடி செய்யப்படலாம். | வரிச் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் வரிகள் மற்றும் மிகைஅறவீடுகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மதிப்பீடு செய்யப்படாத அலுமினிய வார்ப்புகள் மற்றும் கூரைத் தகடுகளின் இருப்பு 2017 ஆம் ஆண்டிலிருந்து நெமோ இன் பிரதான களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டுள்ளன. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்களை செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 செயற்திட்ட தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிர்மாணப்பிரிவின் கீழான ரூபா 1,382.49 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட மூன்று செயற்திட்டங்களை 2020 திசெம்பர் 31 இல் பூரணப்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டங்களின் நிறைவடையும் திகதி 2023 யூன் 30 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. | வாடிக்கையாளர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி செயற் திட்டங்களை முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் நிர்மாணங்கள் கூறுப் பிரிவில் ரூபா 633.83 மில்லியன் மதிப்பீட்டில் 05 திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் அடையப்படவில்லை. எவ்வாறாயினும், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் இல்லாமை, காணிகளின் உரிமை மாற்றங்கள் மற்றும் அரச அமைச்சுக்கள் கலைக்கப்பட்டமை போன்ற காரணங்களால் அந்த செயற்திட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. | கொரோனா வைரஸ் தொற்று நிலைமை இலங்கை சமூகம் முழுவதும் இந்த காலகட்டத்தில் காணப்பட்டது. | ஒப்பந்தங்களின் பிரகாரம் செயற்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதில் தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2.8 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் (29) ஊழியர்கள் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, கட்டிடத் திணைக்களம், அரசாங்க தொழிற்சாலை மற்றும் மத்திய கலாச்சார நிதியம் ஆகியவற்றுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன், கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 35.97 மில்லியன தொகையான் சம்பளங்கள் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | படிப்படியாக ஊழியர்களை மீட்கவும், திரும்பப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுக்கு இணங்குவதற்கும் உரிய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து சம்பளத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஆறு சிரேஷ்ட முகாமைத்துவ பணியிடங்கள் வெற்றிடங்களாக காணபப்பட்டன. பணியாளர் தேவையை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அல்லது மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | முறையான அனுமதியுடன் அத்தியாவசிய சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் படி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலுள்ள பதவிகளின் அளவுக்கு மாத்திரமே ஆட்சேர்த்தல் வேண்டுமெனினும் , அதற்கு முரணாக 362 மேலதிக ஊழியர்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | | |
| (இ) | 28 (ii) ஆம் இலக்க 2006 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதல் இல்லாமல் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாது.இருப்பினும், அந்த விதியைப் புறக்கணித்து, அங்கீகரிக்கப்படாத 09 பதவிகளுக்கு 11 ஊழியர்களை கூட்டுத்தாபனம் ஆட்சேர்ப்பு செய்திருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு தொடர்பான விதி மற்றும் பிரமாணங்களுக்கு நிர்வாகம் இணங்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.3 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வில்லை. | முகாமைத்துவத்தின் கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |